
ஸ்ரீமதேராமாநுஜாயநம:



# ஸ்ரீபேரருளாளராமாநுஜஜீயர்விஷயம்

## கட்டியம்.

தேர்கொண்மலர்நான்முகன்பணிகுறுங்குடியினிற் ...*
சிருதயமுறுமாதவா ... ... ...*
திசையுளோரெவரும்வந்தடிதொழுதுதிசெயத் ...*
திகழ்கருணைபுரிமாதவா ... ... ...*
பார்மருவுபாஷீண்டமாதிமதமாக்கரிகள் ... ...*
பாறவருஜெயகோளரீ ... ... ...*
பரவுமுயிர்பாலனஞ்செய்யவுயர்தேசிகப் ... ...*
படிவமுற்றெருளிர்ஸ்ரீஹரீ ... ... ...*
சீர்கொண்டபேரருளாளராமானுஜ ... ..*
ஜீயரெனநவில்நாதனே ... ... ...*
ஸ்ரீபெரும்பூதூர்யதிராஜனடிகளைச் ... ...*
சிந்தைநிறுவும்போதனே ... ... *
ஆரணத்துறைசெய்திருநாரணன்பரனென்ன ...*
வடியவர்க்கருள்செய்சீலா ... ... ...*
அவனிதனிலுன்சரணபங்கயத்திறல்விறல் ... ...*
அருள்சீலம்வாழிவாழி ... ... (க)

## ஊசல்

### - இராகம் - பைரவி - தாளம்-ரூபகசாபு

பேரொளிசேர்செம்பவளக்கால்களுட்டிப் ... ...*
 பிறங்குகோமேதகத்தால்விட்டம்பூட்டி ... ...*
ஏர்திறங்கொள்வச்சிரத்தால்வடங்கள்மாட்டி... ...*
 யிணையிலெழின்மாணிக்கப்பீடமிட்ட ... ..*
தாரணியோர்வியனுறுஞ்சீரூசன்மீது ... ...*
 தாஸர்குழாங்களிகூரமகிழ்கொண்டார்ந்து ...*
சீரணிகொள்குறுங்குடிவாழ்ஜீயரென்னுஞ் ... ...*
 சிறந்தகருணைக்கடலேயாடிரூசல் ... (௧)

அடிபரவுமாரியரோர்வடந்தொட்டாட்ட ... ...*
 அன்புடன்மாதவர்களொருவடந்தொட்டாட்ட ..*
திடங்கொள்பிரபன்னரொருவடந்தொட்டாட்டச் ...*
 சிறந்தபுலவோர்களொருவடந்தொட்டாட்ட ...*
தடங்கொள்குல்லைவனசத்தார்மார்பினுடத் ... ...*
 தாமரையாளுயகளுருளத்திடை ... ...*
படியினுயர்குறுங்குடிவாழ்ஜீயரென்னும் ... ...*
 பரமனேகளிப்புடனேயாடிரூசல் ... (௨)

திகழுமறையோர்கள்பல்லாண்டுபாடச் ... ...*
 செறியும்பரமதகரிகள்சிதைவுற்றோட ... ...*
புகழடியருபயசாய்மரைகள்போடப் ... ...*
 பொருவில்திருமான்மகிமைபுவியினீட ... ...*
அகமகிழ்கூர்பாகவதர்குழாங்கள்கூட ... ...*
 ஆரியனேயமலர்பணிசீரியோனே ... ...*
ஜகதலத்தோரோத்துகுறுங்குடியில்வாழுஞ் .. ...*
 ஜீயரென்னுந்தயாபரனேயாடிரூசல் ... (௩)

பார்மருவுகலியகலப்பூதூர்வந்தப் ... ...*
 பகரருஞ்சீர்யதிராஜவள்ளன்மிக்க ... ...*

ஆர்வமுடனுபதண்டகமண்டலத்தோ ... ...*
டாராதனச்சிங்கந்தனையுமீந்து ... ... *
பேர்கருணையாற்றனதாருயிராயோர்ந்த ... ...*
பேரருளாளவிராமானுஜனேயோங்கும் .. ...*
கார்பொழில்சூழ்குறுங்குடியின்மேவிவாழுங் ...*
கருணைவள்ளலேகளிகொண்டாடிருசல் ... (ச)

திகழ்தருபன்னிருதிருமண்காப்பிலங்கச் ... ...*
செறியருட்கண்கமலமலரெனவிளங்க ... ...*
புகழ்செய்முப்புரிநூல்மின்னெனவிளங்கப் ...*
பொன்னுடையருணனொளியெனவிளங்க ... ...*
பகர்த்வயம்பவளவாய்தனில்விளங்கப் ... ... ...*
பங்கயமாமலரெனச்சீரடிவிளங்க ... ...*
நிகரில்குறுங்குடிஜீயரென்னுநாதா ... ... *
நிமலர்துதிபோதனேயாடிருசல் ... ... (ரு)

வாழிதிருமால்குருகூர்வந்தவள்ளல் ... ..*
வாழிசீராளவந்தார்பெரியநம்பி... ... ...*
வாழியிராமானுஜன்சீரியர்கள்போற்றும் ... ..*
வளங்கொண்மணவாளமாமுனிகள்வாழி ... ...*
வாழிகுறுங்குடிஜீயரென்னும்ஸ்வாமி .. ... ...*
வாழியவனடிபணிநல்லடியர்வாழி ... ...*
வாழிசீருபயவேதாந்தம்வாழி ... ... ...*
வாழிமானுறையதிகள்வாழிவாழி... ... ...(சா)

---

## லாலி.

### இராகம்-நவரோசு-தாளம்-திரிசிரசாதிரூபகம்.

தேருபயமாமறைகணவிலுஞ்செவ்வாயா ... ...*
சேதனர்களுய்யும்வணஞ்செய்தருளுபாயா ..*
பார்துதிசெயுடையவர்தம்பதமலரினேயா... ...*
பகர்குறுங்குடிஜீயரென்னுமிகுதூயா ...லாலி (க)

சீர்வசனபூஷணத்தின்றிறமுணர்ந்தசீலா ... ...*
செறியடியர்மகிழ்வுறும்படிசெய்பரிபாலா ... *
பாரிலுறுசமயிகளையடரும்பரகாலா ... ...*
பகர்குறுங்குடிவாழுமெழில்கொண்முக்கோலா-லாலி ()

ஆரியர்கள்பரவுமெழிலம்புயநேர்பாதா ... ...*
அயனுருமோதரியதவமிகுந்தபோதா ... ...*
சீரியர்நன்னெறிகடமைசெலுத்துமுயர்நீதா ...*
திருக்குறுங்குடிஜீயரென்னுமென்னுதா - லாலி (௫)

நாராயணாச்சிரமமாதிவடபாலார் ... ...*
நவையில்கலிகன்றிபுகழ்தலத்திஞெளிர்மாலை ...*
ஆராதகாதலுடனளவின்மங்கலாசா ... ...*
சனஞ்செய்துமகிழ்கொண்டவமலனேமூலா - லாலி ()

செருக்குறும்பொறிகளாற்சிதைந்துமனமாழ்குஞ் ...*
சிறியேனைக்காத்தளித்ததீராவுதாரா ... ...*
திருக்குறுங்குடிஜீயரென நவிலுநாமா... ... ...*
திகழுலகினுறும்பதிகள்புகழ்சார்வபௌமா-லாலி (௬)

## மங்களம்.

இராகம்-மாஹூரி-தாளம்- திரிசிரசாதிரூபகம்.

ஜயமங்களம் - மஹோத்ஸவ - மங்களம்.

பாருளோரிருள்தீர்க்கவந்தகுருகூரர்சரண் ...*
ஆர்வமுடன்சிந்தைசெயுமற்புதருக்கு... ...*
வாரிசத்தடங்களுறைகுறுங்குடியின்மருவியொளிர் *
பேரருளாள்ராமானுஜருக்கு ... ஜயமங்களம் (௧)

ஆரியர்கள்பணியும்யதிபதியருள்செய்திரிதண்டஞ் *
சீர்கொள்திருக்கரமதனிற்சிறப்பவருக்கு ... ...*
ஏர்கொள்குறுங்குடிவாழுமிணையிலுயர்தவமிகுந்த *
பேரருளாளராமானுஜருக்கு ... ஜயமங்களம் (௨)

தேர்கொள்ஸ்ரீபாஷியந்திருவாய்மொழிப்பொருள்கள்
சீரியர்களுக்கருளுஞ் செல்வருக்கு

காரிமாறன்பரவுகுறுங்குடியின்வாழுமுயர் ... ...*
பேருளாளராமானுஜருக்கு ... ஜயமங்களம் (ஙு)

## எச்சரிக்கை.

இராகம் - சாவேரி - தாளம் - ரூபகம்.

சரணம்மெனவடுத்தோர்தமக்கரணுவுயரந்தக்... ...*
கரணுகுறுங்குடிவாழ்பவஹரணு ... எச்சரிக்கை (க)

எதிபதிசரணும்புயமேயிதைபத்தொளிர்தவமார் ..*
பதியேகுறுங்குடிவருமாநிதியே ... எச்சரிக்கை (உ)

தெருள்கூருரவோர்மன்னியதிருக்குறுங்குடியுறைபே *
ரருளாளவிராமானுஜமுனிவா ... ... எச்சரிக்கை (ஙு)

## மங்களம்.

இராகம் -சுருட்டி - அடதாளம்-சாபு

மங்களம்மங்களம்-கருணுநிதே-மங்களம்மங்களம்.

சடகோபனருள்திருவாய்மொழிக்குனாயதாந் ...*
தடமுயரீட்டின்பொருள்தனையே - சீ ... ...*
ரடவுடன்பலகாலுமாரியர்க்கருள்செய்பு ... ...*
மிடமுயர்குறுங்குடிவாழுமென்ஸ்வாமி-மங்களம்மங்களம்.

உபயவேதாந்தப்பிரதிஷ்டாபனுசார்ய ... ...*
அபயமென்றடுத்தோனாயருள்சிரிய - வ ... ...*
ரிபமுறுமிந்திரன்பணிகுறுங்குடியில்வா ... ...*
ழுபமானரகிதனேயொளிருமென்ஸ்வாமி -மங்களம் (உ)

பேருளாளஸ்ரீராமானுஜனெனப்
பெரியோர்பரவுறுமாமுனிவா வழ்
பாரெங்கும்விறல்கொண்டதீரவுதாரா ... ...*
பகர்திருக்குறுங்குடிவாழுமென்ஸ்வாமி-மங்களம் (ஙு)

ஸ்ரீமத்பேருளாளராமாநுஜஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதோராமாநுஜாயநம:

# இனிபதிப்பிக்கப்படும்புத்தகவிளம்பரம்.

ஸ்ரீரங்கமகாத்துமியம் (ஈ) சதாத்தியாயவசனம்

ஷ ஷ -பாடல்

திருநாராயணபுரமென்னும்பிரசித்தநாமமுடைய

எதுகிரிஅந்தாதி

அத்திகிரியந்தாதி

ஆத்மார்த்தகோவை

அத்திகிரிபிள்ளைத்தமிழ்

ஸ்ரீபாரிஜாதவிஜயப்பாடல்

ஸ்ரீகைசிகபுராணப்பாடல்

திருமழிசைக்கோவை

திருநீர்மலை நகண்டவந்தாதி

மேற்படியுலா

## ஸ்ரீவேதவல்லித்தாயார்விஷயம்.

ஊசல்-லாலி-முதலானது

## திருமங்கையாழ்வார்விஷயம்

கீர்த்தனைகள்

பிள்ளைத்தமிழ்

ஊசல்-மங்களம்-முதலானது

## ஸ்ரீஉடையவர்விஷயம்

எதிராஜதயாநிதிமாலை

எச்சரிக்கைமுதலானது

## ஸ்ரீமணவாளமாமுனிகள்விஷயம்

ஜீயரந்தாதி

வரயோகிசதகம்

இங்ஙனம்.

கோ-கா-அழகியமணவாளப்பிள்ளை